**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**&**
**இந்தியவானிலைத்துறை**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை**
**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(22.07.2023 முதல் 26.07.2023)**

**அறிக்கைஎண் 058/2023** **தேதி.21.07.2023**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 29°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 15°செ முதல் 19°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

**கோயமுத்தூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை**

கோயமுத்தூர் மாவட்டத்தின் 18.07.23 முதல் 20.07.23 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 34°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 72 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 53 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 24-27 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (18.07.2023 முதல் 20.07.2023) | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு 26.07.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 18/07 | 19/07 | 20/07 | தேதி | நாள்-1 22/07 | நாள்-2 23/07 | நாள்-3 24/07 | நாள்-4 25/07 | நாள்-5 26/07 |
| 3.6 | 10.8 | 15.8 | மழை (மி.மீ) | 6 | 8 | 15 | 12 | 10 |
| 34 | 33 | 32 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 34 | 32 | 30 | 30 | 31 |
| 24 | 24 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 23 | 23 | 22 | 21 | 21 |
| 5 | 6 | 5 | மேக மூட்டம் (ஆக்டர்) | 6 | 7 | 7 | 7 | 6 |
| 64 | 72 | 71 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 75 | 80 | 80 | 80 |
| 53 | 65 | 60 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 60 | 60 | 70 | 70 | 70 |
| 27 | 24 | 25 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 24 | 24 | 24 | 24 | 20 |
| 250 | 230 | 230 | காற்றுவீசும் திசை | 250 | 230 | 250 | 230 | 230 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (22.07.2023 முதல் 26.07.2023)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 30°செ முதல் 34°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21°செ முதல் 23°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது.

கிழக்கு திசையிலிருந்து தென்மேற்கு திசைவரை வீசக்கூடும்.

| கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள தொகுதிவாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | ஆனைமலை | அன்னூர் | காரமடை | கிணத்துக்கடவு | மதுக்கரை | பெரியநாயக்கன் பாளையம் | பொள்ளாச்சிவடக்கு | பொள்ளாச்சிதெற்கு | சர்க்கார் சாமக்குளம் | சுல்தான்பேட் | சூலூர் | தொண்டாமுத்தூர் |
| 22-07-2023 | 9.0 | 2.0 | 4.0 | 5.0 | 4.0 | 4.0 | 7.0 | 7.0 | 3.0 | 2.0 | 3.0 | 5.0 |
| 23-07-2023 | 12.0 | 4.0 | 6.0 | 8.0 | 7.0 | 6.0 | 10.0 | 10.0 | 5.0 | 4.0 | 4.0 | 8.0 |
| 24-07-2023 | 22.0 | 11.0 | 15.0 | 15.0 | 14.0 | 14.0 | 19.0 | 19.0 | 12.0 | 10.0 | 11.0 | 15.0 |
| 25-07-2023 | 14.0 | 7.0 | 10.0 | 10.0 | 10.0 | 10.0 | 12.0 | 12.0 | 9.0 | 7.0 | 8.0 | 11.0 |
| 26-07-2023 | 8.0 | 5.0 | 7.0 | 7.0 | 7.0 | 7.0 | 7.0 | 7.0 | 7.0 | 4.0 | 6.0 | 8.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலையுடன் காற்றின் வேகம் மணிக்கு 10 -24 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது. கோவை மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் அடுத்த 5 நாட்களிலும் காற்றின் வேகம் மணிக்கு 20 - 24 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது. மண் ஈரத்தினைப் பொறுத்து நீர்பாசனம் செய்யவும். |
| மக்காசோளம் | விதைப்பு | நடவு செய்து 30 நாட்களான இறவை மக்காச்சோளப்பயிருக்கு ஒரு ஏக்கருக்கு 55கிலோ யூரியா மற்றும் 12கிலோ பொட்டாஷை களை எடுத்த பின்பு மேலுரமாக இடவும். |
| நிலக்கடலை | பூக்கும் பருவம் | தற்போது நிலவும் வானிலையால் நிலக்கடலையில் செர்கொஸ்போரா இலைப்புள்ளி நோய் வரவாய்ப்புள்ளது. நோய் ஏற்கனவே தாக்கி இருந்தால் மேங்கோசெப் என்ற பூஞ்சாணக்கொல்லியை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2.5 கிராம் வீதம் கலந்து தெளிக்கவும். |
| கரும்பு | | மழையுடன் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான கரும்பில் தோகை உரித்து விட்டம் கட்டவும். பின்பட்டகரும்பு நடவு செய்யும் விவசாயிகள் நடவைதொடரவும். மேலும் ஏற்கனவே நடவுசெய்யப்பட்ட இடங்களில் சீரானபயிர் எண்ணிக்கை இருக்குமாறு பார்த்துக்கொள்ளவும். |
| பருத்தி | விதைப்பு | தொடர்ந்து ஒரு சில பகுதிகளில் மழை பெய்து வருவதால் தகுந்த வடிகால் வசதி ஏற்படுத்தவும். குறிப்பாக மானாவாரியில் விதைக்கப்பட்டுள்ள பருத்தியில் முளைப்புத்திறன் குறைந்து காணப்படுவதால் விவசாயிகள் விதைத்த உடனே பாலித்தீன் பைகளில் விதைகளை போட்டு நாற்றுக்களை தயார்செய்த பின்னர் நடவு செய்வதன் மூலம் சரியான பயிர் எண்ணிக்கையை பராமரிக்கலாம். |
| தக்காளி | நாற்றாங்கால் | மேகமூட்டம் மற்றும் மழையின் காரணமாக தக்காளி நாற்றுகளில் மண்ணிலிருந்து பரவும் நோய்களைத் தடுக்க ஒரு லிட்டர் தண்ணீரில் 10 கி டிரைகோடெர்மா கலந்து தூரில் ஊற்றவும். |

| | | |
|---|---|---|
| வகைகள் | | வகைகளை விதைக்கவும். |

| | | |
|---|---|---|
| கறிவேப்பிலை | | நிலவும் வானிலை காரணமாக கறிவேப்பிலையில் இலைப்புள்ளி நோய் தென்படுகிறது. இதைக்கட்டுப்படுத்த ஒரு கிராம் கார்பன்டசிம்மை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். |
| வாழை | 5 மாதத்திற்கு மேல் | மணிக்கு 8 - 28 கி.மீ வரை வேகமான காற்று எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு தகுந்த முட்டு கொடுக்கவும். |
| மஞ்சள் | வளர் பருவம் | கடந்த வாரம் பெய்த மற்றும் எதிர்பார்க்கப்படும் தூறல் மழையினை பயன்படுத்தி 30 நாட்கள் வயதுடைய மஞ்சளில் களை எடுக்கவும். போதிய வடிகால் வசதியினை உறுதி செய்யவும்.<br>30 நாள் வயதுடைய மஞ்சளுக்கு ஒரு ஹெக்டருக்கு 55 கிலோ யூரியா மற்றும் 30 கிலோ மூரிடயேட் பொட்டாஷ் உரத்தினை இட்டு நீர் பாய்ச்சவும். மஞ்சளில் நுண்ணூட்டசத்து குறைபாடுகளை நிவர்த்தி செய்ய பெரஸ்சல்பேட், துத்தநாக சல்பேட் மற்றும் போராக்ஸ் ஒவ்வொன்றும் 375 கிராமினை 250 லிட்டர் தண்ணீரில் கலந்து இரண்டு முறை 25 நாள் இடைவெளியில் தெளிக்கவும். |
| தென்னை | | இதுவரை தென்னைக்கு உரமிடாத விவசாயிகள் மரத்திலிருந்து 1.8 மீட்டர் தள்ளி அரை வட்ட வடிவில் குழி எடுத்து யூரியா 650 கிராம், 1 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் மியூரிட்டோ பொட்டாஷ் உரங்களை கலந்து 50 கிலோ தொழு உரத்துடன் இட வேண்டும். |
| கால்நடை | | அதிகரித்து வரும் காற்றின் காரணமாக கால்நடை குடில்களில் ஈக்களின் தாக்கம் அதிகரிப்பதை தடுக்க, குடிலை நன்கு சுத்தப்படுத்தி பொட்டாசியம் பர்மாங்கனேட் கரைசலை நாள் ஒன்றுக்கு மூன்று முறை தெளிக்கவும்.<br>அதிக காற்றிலிருந்து கால்நடைக் குடில்களுக்கு போதிய பாதுகாப்பு செய்யவும். குடிலைச் சுற்றிலும் சணல் சாக்குப்பைகளைத் தொங்கவிடவும்.<br>காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதால் கோழிகளின் தீவனங்கள் சிதற வாய்ப்புள்ளது. எனவே காற்றின் வேகத்தை குறைக்க கோழிக்கூடரங்களில் சுற்றிலும் சாக்கு பைகளை தொங்கவிடவும். |

## குறுஞ்செய்தி

- மேகமூட்டம் மற்றும் மழையின் காரணமாக தக்காளி நாற்றுகளில் மண்ணிலிருந்து பரவும் நோய்களைத் தடுக்க ஒரு லிட்டர் தண்ணீரில் 10 கி டிரைகோடெர்மா கலந்து தூரில் ஊற்றவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**